# விருதுநகர் மாவட்டத்தில் ஒருமணி நேர கூடுதல் பணிக்கான பணிகள் துவங்கியது.

BSNLன் புத்தாக்கம் தொடர்பாக 06.02.2017 அன்று டெல்லியில் நடைபெற்ற அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் 10.02.2017 முதல் 31.03.2017 வரை கூடுதலாக ஒரு மணி நேரம் பணியாற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது. 07.02.2017 அன்று சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழுவில் இந்த திட்டத்தை தமிழகம் முழுவதும் சிறப்பாக அமல் படுத்துவது என்றும் அதற்கான பணிகளை BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட சங்கங்கள் முன்கையெடுக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் விருது நகர் மாவட்டத்தில் 14.02.2017 அன்று அனைத்து சங்கக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் BSNLEU, SNEA, AIBSNLEA, AIBSNLOAஆகிய சங்கங்களின் மாவட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். AIGETOA பொறுப்பாளர் வெளியூர் சென்றுள்ளதால் வர இயலாத சூழ்நிலையை கூறி கூட்டம் எடுக்கும் முடிவுகளை அமல் படுத்த உறுதி அளித்திருந்தார். அந்தக் கூட்டத்தில் அகில இந்திய அனைத்து சங்கக் கூட்ட முடிவுகளை கீழ்கண்டவாறு சிறப்பாக அமல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

1. வாரத்தில் இரண்டு நாட்கள் ரோடு ஷோ நடத்துவது.
2. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று லேண்ட் லைன் மற்றும் ப்ராட் பேண்ட் இணைப்புகளை பெறுவதற்கான இயக்கம் நடத்துவது.
3. ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைகளில் அனைத்து சங்க நிர்வாகிகளை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள குழு EB வியாபார பணிகளை மேற்கொள்வது.
4. இந்த அனைத்து பணிகளிலும், அந்தந்த பகுதிகளில் உள்ள டெலிகாம் டெக்னீஷியன்கள் மற்றும் அனைத்து ஊழியர்களையும், அதிகாரிகளையும் பயன்படுத்துவது.
5. மார்ச்-9 மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் நோக்கிய பேரணியை உற்சாகமாக நடத்துவது.

இந்த பணிகளை செய்வதற்காக BSNL ஊழியர் சங்கத்தின் விருதுநகர் கிளைகளின் இணைந்த கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும் இந்த பணிகளை சிறப்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.




அனைத்திந்திய சங்கத்தின் முடிவுகளை சிறப்பாக அமல்படுத்த துவங்கிய விருதுநகர் மாவட்ட சங்கத்தினை தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. NFTE உள்ளிட்ட இதர சங்கங்களையும் இதில் இணைத்திட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதர மாவட்ட சங்கங்களும் தங்கள் மாவட்டத்தில் நடைபெற்ற பணிகளை உடனடியாக மாநில சங்கத்திற்கு தகவல் தரவேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக்கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்

தோழமையுடன்,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**